## தெங்கு ஆராய்ச்சி நிறுவகம் - 2020

---

# 1 நிதிக்கூற்றுக்கள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.அந்நியமங்களின் கீழானஎனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி

இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின்உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்குஉள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின்செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனம் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனத்தின்அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின்வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இல் 76 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாதவாறு காட்டப்பட வேண்டிய 05 வருட காலத்திற்காக 2017 மே 16 ஆந் திகதி தானியங்கியாகப் புதுப்பிக்கப்படும் படியாக நிரந்தர வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 42,600,000 க்காக மீளாய்வாண்டில் கிடைக்கப் பெறவேண்டிய திரண்ட வட்டி ரூபா 21,092,340 நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்கான கணக்குகளின் ஊடாக சரி செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். | நியமத்தின் அறிவுறுத்தல் படி பெறப்பட வேண்டிய நிரந்தர வைப்பு வட்டியினை சரி செய்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இல் 08 ஆம் பந்தியின் படி காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு மற்றும் காசையொத்த வைகளின் கீழ் காட்டப்பட வேண்டிய 03 மையங்களில் உள்ள சில்லறைக்காசு ரூபா 153,780 நடவடிக்கை செயற்பாட்டின் கீழும் நிதி நிலைமைக் கூற்றில் ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் கீழும் காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்கன கணக்குகளின் ஊடாக சரி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறிவிக்கின்றேன். | நியமத்தின் அறிவுறுத்தல் படி சில்லறைக்காசு நிதிக் கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் சொத்துக்களின் தன்மை மற்றும் செயற்பாட்டு அடிப்படையில் அவற்றின் பயன்தரும் ஆயுட்காலத்தினை கணிக்கப்பட்டு | பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக அவ்வருட வரவு செலவு அறிக்கையில் இடப்பட்டிருந்த ஒவ்வொரு செலவின குறியீட்டினைக்காக பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டினை அடிப்படையாகக் கொண்டு பணம் | நியமம் இலக்கம் 07 இன் பிரகாரம் சொத்துக்களின் தன்மை மற்றும் செயற்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் பயன்தரு ஆயுட் |

| | | | |
|---|---|---|---|
| | தேய்மானத்தினை மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட பயனினை தரும் ஆயுட் காலமுள்ள ரூபா 3,651,845 பெறுமதியான மரத் தளபாடங்கள் மற்றும் ரூபா 749,000 பெறுமதி வாய்ந்த வாகனங்கள் ஒரே சொத்துத் தொகுதியின் கீழ் வகைப்படுத்தப்பட்டு தேய்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | செலுத்தப்பட்டமையினால் இவ்வாறு சில சொத்துக்கள் அதற்குரிய தொகுதியிலிருந்து விலகி வேறு சொத்துத் தொகுதியின் கீழ் வகைக்குள்ளாகி இருக்கின்றன. எதிர்காலத்தில் இவ்வாறான பிறழ்வினை ஏற்படாமலும் தற்போதைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் சொத்துக்களை சரி செய்யப்பட்டு சீராக்கல் மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். | காலத்தினை கணிக்கப்பட்டு தேய்மானத்தினை மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (ஈ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 15 இல் 29 ஆம் பந்தியின் பிரகாரம் நிர்மாண பணியினை மேற்கொள்ளப் பட்டிருக்கும் 02 கட்டிடங்களுக்காக செய்யப்பட்டிருக் கொண்டு போகும் பணிவினைக்காக பணமாக செலுத்தப்பட்டுள்ள ரூபா 351,832 பதிலாக செலுத்தப்பட்ட மொத்த ஒப்பந்தப் பெறுமதியான ரூபா 4,678,772 கணக்கிலிடப்பட்டுள்ளதன் காரணமாக ஆண்டினுள் மேற்கொள்ளப்படும் வேலைக்கான கணக்கின் மற்றும் செலுத்தப்பட வேண்டிய செலவின கணக்கின் மீதிகள் தலா ரூபா 4,326,940 கூடுதலாக பதியப்பட்டிருந்தது. | பணமாக செலுத்தப்பட்ட அளவினைக்கு கூடுதலாக மேற்கொள்ளப்படும் வேலைக்கான கணக்கில் பதியப்பட்டுள்ள மொத்த ஒப்பந்த பெறுமானத்தினை அகற்றப்பட்டு 2021 வருட கணக்கின் ஊடே சரி செய்யப்பட்டு சீராக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். | தரத்திற்கேற்ப ஒப்பந்தத்தினை ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் ஒப்பந்தம் முடியும் காலம் வரையிலான கிரயத்தினை கணக்குகளில் பதியப்பட வேண்டியமை. |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நீக்கல் செய்யப்பட்டிருந்த கிரயம் ரூபா 10,007,409 வாய்ந்த வாகனங்கள் மற்றும் உபகரணங்களுக்காக கிடைக்கப் பெற வேண்டிய | வருட இறுதியில் மேற்கொள்ளப்பட்ட பொருட் நீக்கல்களுக்கான தொகையினை 2021 சனவரி மாதம் தொடக்கம் மார்ச் மாதம் வரையில் | சொத்துக்களை நீக்கல் செய்தமைக்காக கிடைக்கப் பெற வேண்டிய தொகையினை |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான ரூபா 2,579,026 மற்றும் நீக்கல் இலாபமான ரூபா 2,305,859 நிதிக் கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | இடையிடையே கிடைக்கப் பெற்றிருந்ததனால் கிடைக்கப் பெற வேண்டிய தொகையினை நிச்சயப்படுத்தி இனங்கண்டு கொள்ள முடியாது போனமையினால் அத்தொகையினை கிடைக்க வேண்டியுள்ளதாக கணக்கிலிடப்பட முடியாது போயிற்று. 2021 வருட கணக்குகள் ஊடாக சரி செய்யப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். | நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | சபையினால் மூலதனமாக்கி பாவனை செய்யப்பட்டு முன்னைய வருடம் மீண்டும் கையளிக்கப்பட்ட தெங்கு அபிவிருத்தி சபைக்கு உரிய றுன்காவத்த ஆராய்ச்சி நிலையத்தின் கட்டிடங்களை ஏடுகளிலிருந்து தள்ளுபடி செய்யப்பட்ட போது உருவான ரூபா 3,913,777 க்கான தேறிய பற்று மீதியினை திரண்ட மிகையினைக்கு சீராக்கல் செய்வதற்குப் பதிலாக மீளாய்வு ஆண்டு மிகையினைக்கு சீராக்கப்பட்டதன் காரணமாக நிதிக் கூற்றுக்களில் அப்பெறுமதியிலிருந்து மிகையினைக்கு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இது போன்ற பிறழ்வுகள் ஏற்படாதவாறு கவனம் செலுத்தப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். | முன்னைய வருடம் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் திரண்ட மிகையினையில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (இ) | வெலிகம இலைவாடும் நோயினை கட்டுப்படுத்துவதற்காக கலப்பு விதை தெங்கு பெற்று கொள்ளும் பொருட்டு நாற்றுப் பாத்தியினை தாபிப்பதற்கு தேங்காய் பயிர்ச் செய்கை சபையினால் 2016 வருடம், 10 வருட காலத்திற்காக குத்தகைக்கு எடுக்கப்பட்ட வெலிகம காணியினைக்கு ஒப்பந்த பிரகாரம் செலுத்தப்பட வேண்டிய | வெலிகம இலை வாடும் நோயினை தொடர்பான திட்டத்தினை தேங்காய் பயிரச் செய்கை சபை மற்றும் கைத்தொழில் அமைச்சு ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்டமை யினால் "தேங்காய் பயிர்ச் சபைக்காக பணம் செலுத்துதல" எனும் வசனத்தினை புரிந்துணர்வு ஒப்பந்தத்திலிருந்து அகற்றப்பட்டு | 2020 வருடத்தினுள் ஒப்பந்தத்தினை திருத்தப்பட்டிருக் காமையினால் அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கும் ஒப்பந்தத்தின் படி பொறுப்புக்கள் வெளிக் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆயினும் செலுத்தப்படாத ரூபா 1,000,000 ஆரம்ப செலுத்துதல் மற்றும் தலா ரூபா 25,000 வருடாந்த கட்டணம் கணக்கிலிடப்பட்டிருக்க வில்லை. இதன் காரணமாக மீளாய்வாண்டு இறுதியில் நடைமுறை பொறுப்புக்கள் ரூபா 1,075,000 குறைவாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டன. | திருத்தப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதனால் 2020 வருடத்திற்கான கணக்குகளில் அது தொடர்பான செலவினங்கள் அல்லது ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | |
| (ஈ) | பல்வேறு திட்டங்களுக்காக நேரடி அமைச்சிலிருந்து கிடைக்கப்பெறும் ஒதுக்கீடுகள் கணக்கிலிடப்படும் விதம் குறித்து சரியானதொரு கணக்கீட்டு கொள்கையினை வகுத்துக் கொள்ளாது 31 திட்டங்களுக்காக பொது மூலதன கொடையாக பெறப்பட்டிருந்த ரூபா 173,256,556 மூலதனம் கொண்ட கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு அப்பணத்தினை பயன்படுத்தப்பட்டு செய்து முடிக்கப்பட்டிருந்த 27 திட்டங்களுக்கான செலவினமாக ரூபா 11,427,751 சபையின் செலவினமாக பதியப்பட்டு இருந்த போதிலும் இச்செலவினம் தொடர்பாக மூலதன பெறுவனவு அளவினை நிதிச் செயலாற்றல் கூற்றில் வருமானமாக இனங்கண்டு கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனல அரசி மூலதன பங்களிப்பு மற்றும் திரண்ட மிகையினை முறையே தலா 111,427,751 கூடுதலாகவும் குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | முடிவுற்றிருந்த திட்டங்கள் தொடர்பான மூலதன ஒதுக்கீடுகளிலிருந்து குறைக்கப்படாத செலவினங்களினை 2021 வருடம் சீராக்கங்களுக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பல்வேறு திட்டங்களுக்காக கோடு அமைச்சிலிருந்து கிடைக்கப் பெறும் ஒதுக்கீடுகள் கணக்கிலிடப்படும் விதம் குறித்து சரியானதொரு கணக்கீட்டு கொள்கையினை வகுக்கப்பட்டு கணக்கினை சீராக்கப்படல் வேண்டும். |
| (உ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நூலக் | நூலக புத்தகங்கள் தொடர்பாக வெளிப்படை | நூலக புத்தகங்கள் |

| | | |
|---|---|---|
| புத்தகக் கையிருப்பு மெய்யுறுதி அறிக்கையின் படி 289 புத்தகங்களின் குறைபாடும், 190 புத்தகங்கள் கணக்கில் பதியாமையும் 31 புத்தகங்கள் பல்வேறுபட்ட பிரச்சினை காரணமாகவும் மெய்யுறுதி செய்யப்படாமை க்கான காரணங்கள் அறியப் பட்டிருந்தன. இதனால் நிதிக் கூற்றுக்களில் காணப்பட்ட ரூபா 3,159,059 க்கா புத்தக மதிப்பீட்டின் பிழையின்மை யினை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாது இருந்தது. | மெய்யுறுதியினைக்கான குழுவொன்று நியமிக்கப்பட்டிருப்பதுடன் தற்போது அதன் செயற்பாகள் இறுதி கட்டத்தை அடைந்துள்ளது. | தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்றினை முன்னேற்றவும் வெளிப்படை மெய்யுறுதியின் படி கணக்கினை சீராக்கம் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

## 1.6. பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிநாடு சென்று திரும்பிய உத்தியோகத்தர்களுக்கு 2019 ஆம் ஆண்டு பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா 777,856 தொகையினை மீளாய்வாண்டு இறுதி வரையிலும் கூட மீள் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளாது நிதி நிலைமைக் கூற்றில் ஏனைய நடைமுறை சொத்துக்களின்கீழ் பதியப்பட்டிருந்தது. | தேசிய வரவு செலவு திணைக்களத்திற்கு அனுமதியினை பொதுவாக அதிக சந்தர்ப்பங்களில் பயணத்தின் பின்னர் கிடைப்பதனால் கோடு அமைச்சின் அனுமதியுடன் முற்பணமாக இத்தொகையினை வழங்கப்பட்ட போதிலும் இது வரை அனுமதியினை கிடைக்கப்பெறவில்லை. | தாமதப்படுத்தாது முற்பணத்தினை அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | 1992-2014 வருட கால இடைவெளியினுள் புலமைப்பரிசில் பெற்று வெளிநாடு சென்று மீண்டும் கடமைக்கு வராத 09 உத்தியோகத்தர்களிட மிருந்து உடன்படிக்கை பிரகாரம் அறவிடப்பட வேண்டிய ரூபா 28,588,859 தொகையினை உத்தியோகத்தர்கள் மற்றும் | உடன்படிக்கையினை மீறிய 07 உத்தியோகத்தர்களுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கினை விசாரிக்கப்பட்டு வருவதாகவும் மற்றும் இருவருக்கு எதிராக வழக்கினை தொடரும் படியும் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் கொவிட் தொற்று | உடன்படிக்கை யினை மீறியவர்களிட மிருந்து சபை தொகையினை அறவிடப்பட வேண்டும். |

| | |
|---|---|
| பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | காரணமாக அதன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை |

**1.6.2 செலுத்த வேண்டிய தொகை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1 வருடத்திற்கு மேல் பழைமையான 25 மூன்றாந் தரப்பினருக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 11,513,887 தொகையினை தீர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். | மூன்றாந் தரப்பினருக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகையினை தீர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.7 சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணம் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணங்களின் அவதானம் | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நி.பி 571 | திறைசேரியினால் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த செஸ் நிதியத்தின் மூலமாக செயற்படுத்தப்பட்ட செஸ் திட்டம் முடிவடைந்து மீளாய்வாண்டிற்கு 13 வருடங்கள் கழிந்திருந்த போதிலும் தங்க வைத்துக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 424,352 தொகையினை தீர்த்து வைக்கப்படவோ அல்லது வருமானத்துடன் சேர்த்துக் கொள்ளப்படவோ இல்லாது முன்கொண்டு | சம்பந்தப்பட்ட தங்க வைக்கப்பட்டிருக்கும் தொகையினை விடுவிப்பதற்கு அந் நிறுவனங்களின் தற்போதைய விலாசங்களினை தேடிக் கண்டுபிடிப்பது கஷ்டமாக உள்ளது. முடிக்கப்பட்ட ஒப்பந்த வேலைகளில் குறைபாடுகள் உள்ளனவா என்பதனை தேடிப்பார்த்து பின்னர் உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் 2021 வருடம் மீளச் | நிதிப் பிரமாணம் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தீர்த்து வைக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செல்லப்பட்டிருந்தது. | செலுத்தவோ அல்லது வருமானத்துடன் சேர்த்துக் கொள்வதற்கோ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். | |
| (ii) | நி.பி 371 | முற்பணம் பெற்றுக் கொள்ளப்பட்ட காரியம் முடிந்ததும் அம்முற்பணத்தினை மீளப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதுடன் பல்வேறுபட்ட திட்டங்கள் மற்றும் பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்வதற்காக 2018 மற்றும் 2019 வருடங்களில் 3 தரப்பினர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட முழுத் தொகையினை ரூபா 939,558 க்கான முற்பண தொகையினை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | 05 ஆராய்ச்சி திட்டங்களுக்காக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள முற்பணத்தினை அத்திட்ட வேலைகள் முடிவுறும் கட்டத்திற்கமைய முடிவுப்பு மேற்கொள்ளப்படும். வெளிநாட்டு பிரயாணம் மேற்கொள்வதற்கு விமான பயணச் சீட்டு கொள்வனவுக்காக இருவருக்கு கொடுக்கப்பட்ட முற்பணத்தினை கிடைக்காமையினால் முடிக்கப்பட இயலாது உள்ளது. குழாய் கிணறு ஒன்றினை நிர்மாணிப்பதற்காக பெற்றுக் கொடுக்கப் பட்டுள்ள மற்றைய முற்பணத்தினை அச்செயற்பாடு வெற்றியளிக்கா மையினால் செலவினமாக தள்ளுபடி செய்யவோ அல்லது முன் நடவடிக்கை மேற்கொள்வதற்கோ பணிப்பாளர் குழாமின் கவனத்திற்கு விடப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் படி முற்பணம் பெற்றுக் கொள்ளப்பட முடியாததன் பின்னர் அவை முடிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 19,639,632 மிகையாக இருந்ததுடன் அதற்கிணங்க சென்ற ஆண்டின் மிகை ரூபா 39,691,558 ஆக இருந்தது. அதன்படி நிதி விளைவில் ரூபா 20,051,936 பின்னடைவு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் வருமான் ரூபா 5,708,600 ஆல் அதிகரித்த போதிலும் செலவினம் ரூபா 25,760,534 ஆல் அதிகரித்தமை இப்பின்னடைவுக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஒரு வருடத்திற்கு ''கப்றுவன'' கலப்பு தென்னங் கன்று 250,000 தேசிய தென்னை நற்றலுக்குபெற்றுக் கொடுப்பதனை குறிக்கோளாக கொண்டு ரூபா 25,814,945 அரச செலவினம் மற்றும் ரூபா 40,375,217 சிலாபம் பெருந்தோட்ட கம்பனியின் செலவினமாகவும் அக்கம்பனிக்கு உரித்தான சிலாபம் கீனியம் தோட்டத்தில், 2013 வருடம் 160 ஏக்கரிலான விதை தெங்கு தோட்டமொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும், சாத்தியக் கற்றலினை மேற்கொள்ளப்பட்டு நீண்டகால திட்டத்தினை தயாரிக்கப்பட்டுள்ளமை, 4,818 தென்னங்கன்றுகளுக் கான பற்றாக்குறை நிலவியமை, கைச்செய்கை மூலமான மகரந்த செயற்பாடு மற்றும் பயிர்ச் செய்கையினை முறையாக பராமரிக்கப்படாமை ஆகிய காரணங்களினால் இத்தெங்கு பூங்காவினை தாபித்ததன் எதிர்பார்க்கப்பட்ட நோக்கினை அடைய | இப்பூமி பிரதேசத்தில் இரு சிறிய வாவிகளும், சிறு காடும் இருந்தமையினால் விதை தென்னங்கன்று நாட்டி இருக்கும் சுமார் 141 அளவிலான ஏக்கர் நிலத்தில் இன்னும் 3580 மரக்கன்றுகளுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், பராமரிப்பு செயற்பாடுகளில் ஏற்பட்ட குறைபாடுகள், 4483 மரக் கன்றுகள் அழிந்து போனமை பிரதான காரணிகளாக இருந்தன. செற்றாமன் விதை உற்பத்தியின் ஊடாக இவ்வருடத்தினுள் வெற்றிடங்களின் நடுவதனை முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. பச்சைகுந்திரா மரத்திற்கு வன்மையானதாக தாக்கத்தினை ஏற்படுத்தும் சிவப்பு வண்டு சேதத்தினை 2020 வருடம் தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட சிவப்பு வண்டு பூச்சிக் கொல்லியினை இத்தோட்டத்தினுள் இடப்பட்டு இச்சேதத்தினை அடக்குவதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.<br><br>சிலாபம் பெருந்தோட்டக் | விதை பூங்காவினை அமைப்பதன் மூலமாக எதிர் பார்க்கப்பட்ட நோக்கினை அடைந்து கொள்வதற்கு செயற்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கம்பனி மூலமாக தெங்கு விதைத்தோட்ட பராமரிப்பு செயற்பாடுகள் தற்போது நன்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையினால் எதிர்காலத்தில் இத்தெங்கு விதைத் தோட்டத்தில் நல்லதொரு முன்னேற்றத்தினை காணக் கூடியதாக இருக்கும். | |
| (ஆ) | கீனியம தெங்கு விதைத் தோட்டத்தில் 160 ஏக்கர் அளவிலான பூமியில் உள்ள சகல மரங்களுக்கும் நீரை பாய்ச்சுவதற்காக ரூபா 17,501,925 செலவிடப்பட்டு குழாய் முறைமையினை தாபிக்கப்பட்டு இருந்த போதிலும் அதற்கான நீரை தேக்கி வைக்கக்கூடிய தொட்டியினை தாபிக்கப்பட்டிருக்காமை யினால் கிணற்றுக்கு அண்மையிலுள்ள இடங்களுக்கு மாத்திரம் அதன் மூலம் நீர் பாய்ச்சப் படுவதனால் மீதியாகவுள்ள இடங்களுக்கு பவுசர் மூலம் நீரினை பாய்ச்சப்படுவது அவதானிக்கக்கூடியதாக இருந்தமையினால் அப் பெறுகையினை தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைக் குழுவினது பொறுப்பினை கருத்து வேற்றுமையுடையதாக இருந்தது. | நீரை தேக்கி வைக்கக் கூடிய தொட்டியினை பாவனை செய்வதற்கு ஆரம்பத்தில் திட்டம் இடப்பட்டிருக்கவில்லை. அடி நில கிணற்று நீரினை நிமிடத்திற்கு 200 லீட்டர் பெற்றுக் கொள்ள முடியுமென நீர் வழங்கல்கள் சபையினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தமை யினால் கிணற்று நீரை நேரடியாக குழாய் முறைமையில் பொருத்துவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் வறட்சி காலத்தில் கிணற்று நீர் நிமிடத்திற்கு 60-50 லீட்டர் அளவு பெறப்படுவதனால் இவ்வாறு சகல மரக் கன்றுகளுக்கும் நீரினைப் பாய்ச்சுவது முடியாமைக்கான பிரதான காரணமாகும். 2021 வருடத்திற்கான ஒதுக்கீட்டின் மூலம் நீரனை களஞ்சியப்படுத்தவதற்காக நீர் டாங்கியினை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |
| (இ) | இலை வாடும் நோயினை எதிர்த்து நிற்கக் கூடிய தன்மையினை காட்டும் கலப்பு விதை உற்பத்தியினை மேற்கொள்வதற்காக ரூபா 11,729,698 செலவிடப்பட்டு 2016 வருடம் மாத்தறை | கை மகரந்த சேர்க்கையினை மேற்கொண்ட தொழிலாளியின் ஒப்பந்த காலம் 2020.10.31 திகதியுடன் முடிவடைந்துள்ளதுடன் அதனை முகாமைத்துவ சேவை திணைக்களத்தினால் நீடிக்கப்படாமையினால் கை | வெலிகம இலை வாடும் நோயினை கட்டுப்படுத்துவதில் இருந்த வினைத் திறனின்மையினை இனங்கண்டு அவற்றினை வினைத்திறனுடன் |

| | | | |
|---|---|---|---|
| | வெலிகம பிரதேசத்தில் தாபிக்கப்பட்ட 05 ஏக்கரிலான தென்னந் தோட்டத்தினை முறையான கண்காணிப்பின்றி நடாத்தப்படுதல், குத்தகைக்கு எடுக்கப்பட்ட 50 தென்னை மரங்களினது கை மகரந்த சேர்க்கையினை மேற்கொள்ளாமை மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகள் இடைநடுவே நின்று விடுதல், நோயினால் பீடிக்கப்பட்ட மரங்கள் அகற்றப்பட்டு நடாத்தி செல்லப்படும் பாதுகாப்பு வலயத்தின் நான்காம் கட்ட 294 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 249 பிரிவுகளை பரீட்சிப்பு செய்யப்படாது இருத்தல் ஆகிய விடயங்களின் படி தென்மாகாணத்தில் பரவும் தென்னை இலைவாடும் நோயினை வினைத்திறனுடனும் பயன்தரும் வகையிலும் கட்டுப்படுத்துவது அவதானிக்கக்கூடியதாக இருக்க வேண்டும். | மகரந்த செயற்பாடுகள் நின்றுள்ளது. 2020 வருடம் பாதுகாப்பு வலய நான்காம் கட்டத்தின் கீழுள்ள 45 கிராம பிரிவுகள் பரீட்சிக்கப்பட்டுள்ளன. (ஆராய்ச்சி செயற்பாடுகள் இடை நடுவே நின்று விடுதல் தொடர்பாக விடையளிக்கப் பட்டிருக்கவில்லை) | முகாமைத்துவப் படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | மூன்றாம் தரப்பினரால் சபைக்கு எதிராக சேவை பிரச்சினை தொடர்பாகவும் மற்றும் அடிப்படை உரிமை மீறல் தொடர்பாகவும் 09 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. | ஒரு வழக்கு ஏற்கனவே முடிவடைந்துள்ளதுடன் ஏனைய வழக்குகள் நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு வருகின்றன. | சகல செயற்பாடுகளும் சபையினால் சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணங்களுக்கு அமைய மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (உ) | பணிப்பாளர் குழாமின் தீர்மானப்படி 2016 வருடம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மரக்கறி எண்ணெய் திட்டத்திற்காக பெறப்பட்டிருந்த ரூபா 229,546 பெறுமதியுள்ள இரசாயனப் பொருட்கள் தொடர்பாக தகுந்த நடவடிக்கை | இவ் இரசாயனப் பொருட்களை வேறு பிரிவுகளின் உபயோகத்திற்காக பெற்றுக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | மீதி தொகையினை உபயோகப் படுத்துவதற்கு அல்லது அழித்து விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

மேற்கொள்வதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் செயற்பட்டிருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபைக்குச் சொந்தமான 10 மரபணு மத்திய வள நிலையங்களில் (தோட்டம்) மீளாய்வாண்டில் 3,941,973 உருப்படிகளைக் கொண்ட காய்களிலான தென்னம் விளைச்சல் 2019 வருடம் 5,410,551 உருப்படிகளைக் கொண்ட காய்களுடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 27 ஆகவும், 5,079,29 மதிப்பீடு செய்யப்பட்ட காய்களுடனான விளைச்சலுடன் ஒப்பீடு செய்கையில் நூற்றுக்கு 27 ஆகவும் 5,079,249 மதிப்பீடு செய்யப்பட்ட காய்களுடனான தென்னம் விளைச்சலுடன் ஒப்பீடு செய்கையில் நூற்றுக்கு 22 ஆக குறைவடைந்து இருந்தது. அக் குறைபாடானது மரபணு வள மத்திய நிலையங் களுக்கிடையே நூற்றுக்கு 2 முதல் 40 வரையிலான வீச்சில் இருந்தது. | 2010 முதல் 2020 வரை 10 வருட காலத்திலான தெங்கு ஆராய்ச்சி நிறுவன தோட்டங்களின் தெங்கு விளைச்சலின் ஏற்ற இறக்கத்தினை கூர்ந்து பார்க்கும் போது அதன் சராசரி மதிப்பீடு தென்னம் உருப்படி சுமார் 4.5 மில்லியன் ஆகும். குறைவான மழை வீழ்ச்சி பரவலான மழை இல்லாமை மற்றும் வருடாந்த ஈரலிப்பு நாட்களின் எண்ணிக்கை குறைவடைந்ததனால் 2020 வருடம் ஒட்டுமொத்த விளைச்சலினை மதிப்பீடு செய்யப்பட்ட தென்னம் விளைச்சலுடன் ஒப்பீடு செய்கையில் குறைவாகவே இருந்தது. | தெங்கு விளைச்சலினை குறைவடைவதற்கு தாக்கத்திற்கான சகல விடயங்களையும் நன்று கற்றறிந்து தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (ஆ) சபைக்கு உரிய மரபணு மத்திய நிலையங்களின் தெங்கு விளைச்சலினை உரிய காலத்தில் பறித்து சேகரித்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் படாமையினால் விழுந்து போன தென்னை உருப்படிகளின் எண்ணிக்கை கவனத்தில் கொள்ளத்தக்கதாக இருந்ததுடன் 2018, 2019, 2020 வருடங்களில் அதன் | வாணிப ரீதியாக பராமரிக்கப்படும்பாரிய அளவிலான தென்னந் தோட்ட முகாமைத்துவத்தில் விழுந்து போகும் தென்னை உருப்படிகளின்அளவு ஒட்டு மொத்த தென்னை விளைச்சலில் சுமார் நூற்றுக்கு 20 அளவிலாக இருப்பது சாதாரண மதிப்பினை ஆகும். வருடத்திற்கு 08 தடவை அதாவது 1½ மாதம் முதல் | ஒட்டுமொத்த மர அளவினையும் உள்ளடக்க கூடியதான முறையில் தென்னை விளைச்சலினை உரிய காலத்தில் பறித்து கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அளவினை முறையே 564,659, 1,043,374 மற்றும் 885,811 உருவப்படிகளாக இருந்ததுடன் அது ஒட்டு மொத்த விளைச்சலின் விகிதப்படி முறையே நூற்றுக்கு 20.2, 19.2 மற்றும் 22 ஆக இருந்தன. | 02 மாதம் வரையிலான கால் வீச்சில் தென்னை விளைச்சலினை பறிப்பதனை மேற்கொள்வதனால் விழுந்து போகும் தென்னை உருப்படிகளின் அளவினை சற்று அதிகப்படியாக காணக் கூடியதாக இருந்தது. | |
| (இ) | 10 ஆராய்ச்சி மையம் / மரபணு மையங்களில் 06 அடி வட்டத்தினுள் உரம் இடப்பட வேண்டிய மரங்களின் எண்ணிக்கை 72,844 இருந்த போதிலும் உரம் இடப்பட்டிருந்த மரங்களின் எண்ணிக்கையானது சுமார் 56,918 ஆகும். முறையாக உரம் இடப்படாமை தென்னை விளைச்சல் குறைவடைவதற்கான தாக்கத்தினை ஏற்படுத்தி உள்ளதனை அவதானிக்க கூடியதாக இருந்தது. | கொவிட் 19 தொற்றினால் நாட்டினுள் நிலவிய சூழல் காரணமாக அவ் வருடத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த உரத் தொகையினை ஒவ்வொரு தோட்டங்களுக்கும் அனுப்பி வைப்பதில் ஓரளவு தாமதம் ஏற்பட்டாலும் 2021 வருடம் முதல் காலாண்டினுள் உரம் இடப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. | சாத்தியகரமான தென்னை விளைச்சலினை பெற்றுக் கொள்ளும் பொருட்டு அதற்கான செயற்பாட்டினை திறம்பட முகாமைத்துவப் படுத்தி கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | தென்னை ஆராய்ச்சி சபை மூலம் தேங்காய் பயிர்ச் செய்கை சபைக்கு கலப்பு தென்னை விதையினை பெற்றுக் கொடுப்பது 2014 முதல் 2017 வருடங்களில் முறையே 73,082, 46,367, 37,234 மற்றும் 44,730 உருப்படிகளாக இருந்தன. அவ்வாறாயினும், 2018, 2019 மற்றும் 2020 இடையிலான காலங்களில் 26,763, 36,631 மற்றும் 39,375 உருப்படிகளாக குறைந்திருந்தன. | ஒவ்வொரு வருடத்திலும் வருடாந்த தெங்கு விளைச்சலில் ஏற்படும் ஏற்ற இறக்கம் கலப்பு தென்னை விதை அளவினையின் ஏற்ற இறக்கம் மீதும் தாக்கத்தினை உண்டு பண்ணும். | தேங்காய் பயிர்ச் செய்கை சபைக்கு கலப்பு தென்னை விதையினை பெற்றுக் கொடுப்பது தொடர்பாக முறையான வேலைத்திட்டத் தினை தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தெங்கு ஆராய்ச்சி சபையில் 391 நிரந்தர அங்கீகரிக்கப்பட்ட பணிக் குழாமில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 125 பதவிகள் | அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட மற்றும் மத்திய கற்றல் மற்றும் ஆராய்ச்சிக்கான பணிக்குழாமில் 42 | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட |

| | | |
|---|---|---|
| அல்லது நூற்றுக்கு 32 வெற்றிடங்களாக இருந்தன. அதனுள் சிரேஷ்ட மற்றும் மத்திய கற்றல் ஆராய்ச்சி உத்தியோகத்தர் குழாமில் அங்கீகரிக்கப்பட்ட 69 பதவிகளில் 42 வெற்றிடங்களும் இருந்தன. | வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உள்ளக ஆட்சேர்ப்பினை மாத்திரம் உள்ள பதவிகளுக்கான அடிப்படை தகைமையினை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் இல்லாமையினால் ஆட்சேர்ப்பு தகைமையினை திருத்துவதற்கு முகாமைத்துவ சேவை திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற போதிலும் இதுவரை அனுமதியினைப் பெறப்படாமையினால் ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கு இயலாது போய் உள்ளது. | ஊழியர் எண்ணிக்கை யினை திருத்தியமைப்ப தற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைத் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 06 ஆந் திகதிய பீஈடீ/12 கொண்ட பொது வியாபார சுற்றறிக்கையின் 6.5.1 மற்றும் 6.5.3 பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுடனான வரைவு வருடாந்த அறிக்கையினை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டி இருந்த போதிலும் மீளாய்வு வரைவு வருடாந்த அறிக்கையினை நிதிக்கூற்றுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை தெரிவிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுடன் வரைவு வருடாந்த அறிக்கையினை கணக்காய்வு தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**4.2 வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் வருடத்திற்கான வருடாந்த அறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பிரகடனப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | COVID தொற்றுக் காரணமாக தாமதமாகி உள்ள 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையினை அச்சிடும் செயற்பாடுகள் முடிவடைந்தவுடன் அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படும். | உரிய கால எல்லையினுள் வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பிரகடனப் படுத்துவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளப் படல் வேண்டும். |